முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை

**முன்னிலை: திருமதி K.அறிவொளி, M.A., M.L.,**

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் வெள்ளிக்கிழமை

**குற்றவியல் மேல்முறையீடு வழக்கு எண்.126/2024**

(*CNR.No.TNSV01003761/2024)*

| | |
|---|---|
| விசாரணை நீதிமன்றம் | நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மானாமதுரை. |
| விசாரணை நீதிமன்ற வழக்கு எண் | ஆண்டு பட்டிகை வழக்கு எண்.685/2022 |
| மேல்முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | அழகுசுந்தரம் (39/2024) -*A1*<br>த/பெ.மாயாண்டி,<br>வசந்த் நகர், மானாமதுரை,<br>சிவகங்கை மாவட்டம். |
| எதிர்மேல்முறையீட்டாளரின் பெயர் | தமிழ் நாடு அரசுக்காக சார்பு ஆய்வாளர், மானாமதுரை காவல் நிலைய குற்ற எண்.59/2019 |
| விசாரணை நீதிமன்ற தீர்ப்பு | விசாரணை நீதிமன்றம், 1-வது எதிரி மீது இ.த.ச பிரிவு 324-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து 1-வது எதிரிக்கு இ.த.ச பிரிவு 324-ன் கீழான குற்றத்திற்கு 6 மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| தண்டனை உறுதிபடுத்தப்பட்டதா, மாற்றியமைக்கப்பட்டதா அல்லது ரத்து செய்யப்பட்டதா, | **இறுதியாக,** இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு மானாமதுரை, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.685/2022-ல் கடந்த 20.09.2024-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஆறு மாத கால மெய்க்காவல் சிறைத் தண்டனையை இரத்து செய்தும், மேற்படி இதச பிரிவு 324-ன் கீழான குற்றத்திற்காக ரூ.1000/- அபராதமாக மேல்முறையீட்டாளர்/எதிரி இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்றும், மேற்படி அபராதம் செலுத்தத் தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது. |

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:19:59 +0530

10.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

| | |
|---|---|
| மேல்முறையீடு செய்யப்பட்ட நாள் | 22.10.2024 |
| ஆஜராகப் பணிக்கப்பட்ட நாள் | 25.10.2024 |
| இந்நீதிமன்ற தீர்ப்பு | 10.04.2026 |

இந்த குற்றவியல் மேல்முறையீடு என் முன்பு 06.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர்/எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.*S*.இராஜசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.A.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**தீ ர் ப் பு ரை-**

இந்த குற்றவியல் மேல்முறையீட்டில் மானாமதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆண்டு பட்டிகை வழக்கு எண்: 685/2022-ல் உள்ள 1-ம் எதிரி மேல்முறையீட்டாளர் ஆவார்.

**2. எதிர்மேல்முறையீட்டாளர்/அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:-**

இவ்வழக்கில் புகார்தாரர் சுப்பையா என்பவர் கூலி வேலை பார்த்து வருகிறார் என்றும், புகார்தாரர் சுப்பையாவிற்கும், மானாமதுரை பாண்டியன் நகரில் வசிக்கும் கருப்பையா மகன் மாயாண்டி என்பவருக்கும் பணம் கடன் வசூல் செய்வதில் பிரச்சனை ஏற்பட்டு சிவகங்கை சப்கோர்ட்டில் ஏல நடவடிக்கைக்கான கடன் வசூல் மனு நிலுவையில் உள்ளது என்றும், இந்நிலையில் கடந்த 18.02.2019-ம் தேதி மதியம் 2.15 மணிக்கு புகார்தாரர் சுப்பையா மானாமதுரை மேலரத வீதி வேல்முருகன்

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.04.10 18:20:10 +0530

என்பவரது வீட்டின் அருகே நடந்து வந்து கொண்டிருந்தவரை எதிரிகள் இருவரும் புகார்தாரரைப் பார்த்து ஏண்டா தேவிடியா மகனே எங்க மேலேயே கேஸ் போடுறியா என அசிங்கமாக பேசி 1-வது எதிரி சென்ட்ரிங் கம்பியால் சுப்பையாவின் மூக்கில் அடித்தும், 2-வது எதிரி உருட்டுக் கட்டையால் சுப்பையாவின் இடது காதில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் இருவரும் புகார்தாரர் சுப்பையாவைப் பார்த்து உன்னை கொன்றால் தான் கோர்ட் கேஸ்க்கு எல்லாம் போகமாட்ட என கொலை மிரட்டல் செய்தார்கள் என்று மானாமதுரை காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 326, 506(*ii*)-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2-வது எதிரி அறிவுக்கரசன் மீதான குற்ற வழக்கு தனியாக பிரித்து எடுக்கப்பட்டு ஆண்டுபட்டிகை வழக்கு எண்.68/2024 என எண்ணிடப்பட்டு மானாமதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

**3.** விசாரணை நீதிமன்றத்தின் முன்பாக அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். நீதிமன்ற சாட்சி-1 விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**4.** விசாரணை நீதிமன்றம், 1-வது எதிரி மீது இ.த.ச பிரிவு 324-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து 1-வது எதிரிக்கு இ.த.ச பிரிவு 324-ன் கீழான குற்றத்திற்கு 6 மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தண்டனைத் தீர்ப்பில் குறைவுற்றதாக கருதிய எதிரி இந்த

குற்றவியல் மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**5. மேல்முறையீட்டுக் குறிப்பாணையின் சுருக்கம்:**

i) விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு சட்டத்திற்கும், சாட்சியத்திற்கும், ஆவணங்களுக்கும் மாறாக உள்ளது.

ii) அரசு தரப்பு வழக்கானது புகார் கொடுத்தவர் அவரது மனைவி மற்றும் நீதிமன்ற இளநிலை கட்டளை பணியாளரான மலைச்சாமி என்பவருடன் வந்து கொண்டிருந்த போது 1-ம் எதிரியும் மற்றும் ஒரு நபரும் சேர்ந்து தாக்கியதாக உள்ளதில் மேற்படி மலைச்சாமி என்பவர் அரசு தரப்பில் சாட்சியாக காண்பிக்கப்படவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்கத் தவறிவிட்டது.

iii) ஆனால் விசாரணை நீதிமன்றம் இளநிலை கட்டளைப் பணியாளரான மலைச்சாமி என்பவரை நீதிமன்ற சாட்சியாக விசாரித்த போது புகார் கொடுத்தவரை தெரியாது என்றும், புகார் கொடுத்தவரின் மனைவியை தெரியாது என்றும், வழக்கு சம்பவம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறியுள்ளதை பரிசீலித்து அ.சா.1-ன் கணவரால் பொய் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று விசாரணை நீதிமன்றம் முடிவு செய்து எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டும்.

iv) புகாரில் புகார் கொடுத்தவரின் மகன் உடன் வந்ததாக கூறப்படவில்லை என்பதையும் அ.சா.1 ஆகிய புகார் கொடுத்தவரின் மனைவி விசாரணை நீதிமன்றத்தில் சம்பவம் நடந்து கொண்டிருந்த போது அவரது மகனாகிய அ.சா.2 வந்ததாக கூறியிருப்பதை விசாரணை நீதிமன்றம் பரிசீலித்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் பொய் சாட்சியம் அளித்துள்ளனர் என்று விசாரணை நீதிமன்றம் முடிவு செய்து எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டும்.

v) இளநிலை கட்டளைப் பணியாளரான மலைச்சாமி என்பவருக்கு 1-ம் எதிரியின் தந்தை வீட்டை அடையாளம் காண்பித்துவிட்டு வந்த போது சம்பவம் நடந்ததாக கூறப்பட்டிருப்பதில் அ.சா.1 ஆகிய புகார் கொடுத்தவரின் மனைவி தங்களுடன் இளநிலை கட்டளைப் பணியாளர் வந்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் இளநிலை கட்டளைப் பணியாளர் தனக்கு புகார் கொடுத்தவரை தெரியாது என்றும், சம்பவம் பற்றி தெரியாது என்றும் கூறியிருப்பதை பரிசீலித்து அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது போல சம்பவம் நடைபெறவில்லை என்று விசாரணை நீதிமன்றம் முடிவு செய்து எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டும்.

vi) எதிரி மீதான இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(பி), 506(*ii*)-ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்துள்ள விசாரணை நீதிமன்றம் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் பொய் சாட்சியம் அளித்துள்ளனர் என்று முடிவு செய்து எதிரி மீதான இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டும்.

vii) சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்தில் அதிகமான வீடுகளும், கடைகளும் உள்ள நிலையில் மேற்படி கடை மற்றும் வீடுகளில் உள்ள நபர்கள் யாரையும் அரசு தரப்பில் சாட்சியாக காண்பிக்கப்படவில்லை என்பதையும் விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்கத் தவறிவிட்டது.

viii) தனி நபர்கள் உள்ள இடத்தில் சம்பவம் நடைபெற்றதாக கூறப்பட்டுள்ள நிலையில் சம்பவ இடத்தில் உள்ள நபர்களை விசாரணை செய்யாத நிலையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் ஆர்வமுடைய சாட்சிகள் என்று முடிவு

செய்து மேற்படியார்களின் சாட்சியம் நம்ப இயலாத ஒன்றாக உள்ளது என்று முடிவு செய்து விசாரணை நீதிமன்றம் எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டும்.

ix) அ.சா.2-ன் சாட்சியத்தை நம்ப இயலாது என்று முடிவு செய்துள்ள விசாரணை நீதிமன்றம் அ.சா.1-ன் சாட்சியமும் நம்ப இயலாத ஒன்றாக உள்ளது என்று முடிவு செய்து எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டும்.

x) சம்பவத்தின் போது எதிரியால் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் ஆயுதத்தை எதிரி அங்கேயே போட்டு விட்டு சென்று விட்டாரா அல்லது எடுத்துச் சென்றாரா என்பது பற்றி அரசு தரப்பில் விளக்கம் அளிக்கப்படவில்லை என்பதையும் விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்கத் தவறிவிட்டது.

xi) புகார் கொடுத்தவரும் சம்பவத்தில் காயமடைந்ததாக சொல்லப்படுபவருமான சுப்பையா என்பவர் மானாமதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அங்கிருந்து சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில் மேற்படி சுப்பையா என்பவர் காவல் நிலையத்தில் ஆஜராகி புகார் கொடுத்தார் என்ற அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ள நிலையில் சுப்பையா என்பவரால் காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி புகார் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்று விசாரணை நீதிமன்றம் முடிவு செய்திருக்க வேண்டும்.

xii) அ.சா.2 ஆகிய புகார் கொடுத்தவரின் மகன் அவரது சாட்சியத்தில் தன் தந்தை மானாமதுரை அரசு மருத்துவமனையில் சம்பவம் நடந்த தேதியான 18-ம் தேதியிலிருந்து 20-ம் தேதி வரை வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றார் என்று கூறியிருப்பதிலும் அதன் பின்னர் தான் மேல் சிகிச்சைக்காக பரிந்துரை

செய்யப்பட்டது என்றும், மேல் சிகிச்சைக்கு செல்லும் வரை புகார் கொடுத்தவர் அவரது வீட்டில் தான் இருந்தார் என்று கூறியிருப்பதையும், மேற்படியாரின் சாட்சியம் அவரது தாயாரான அ.சா.1-ன் சாட்சியத்திற்கு மாறாக உள்ளது என்பதையும் விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்கத் தவறிவிட்டது.

xiii) அ.சா.1 அவரது சாட்சியத்தில் சம்பவத்தின் போது நீதிமன்ற ஊழியர் உடன் இருந்ததாக கூறியுள்ளதையும், ஆனால் அ.சா.1-ன் மகனாகிய அ.சா.2 சம்பவத்தின் போது நீதிமன்ற ஊழியர் உடன் இல்லை என்று கூறியுள்ளதையும் விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்கத் தவறிவிட்டது.

xiv) சம்பவ இடத்தை பார்வையிட்டு மகஜர் தயாரித்த போது உடனிருந்ததாக சொல்லப்படும் சாட்சிகளான அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் பிறழ் சாட்சியாக மாறியுள்ளனர். புகாரைப் பெற்றதாகச் சொல்லப்படும் முதல் நிலை காவலர் லட்சுமி என்பவரை அரசு தரப்பில் சாட்சியாக காண்பிக்கப்படவில்லை.

xv) அ.சா.1 சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரி மீதான குற்றச்சாட்டு சம்பவம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக விசாரணை நீதிமன்றம் முடிவு செய்திருப்பதும் தவறாகும். அ.சா.1-ன் சாட்சியத்தில் உள்ள முரண்பாடுகளை பரிசீலனை செய்து விசாரணை நீதிமன்றம் எதிரியை விடுதலை செய்திருக்க வேண்டும்.

எனவே, மேல்முறையீட்டாளர்/1-ம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மேல்முறையீட்டினை கோப்பிற்கு எடுத்து, மானாமதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.685/2022-ல் கடந்த 20.09.2024-ம் தேதியன்று வழங்கிய தீர்ப்பை ரத்து செய்தும், மேல்முறையீட்டை அனுமதித்து உத்தரவிட வேண்டி இம்மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:20:47 +0530

10.04.2026

முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

**6. இந்த மேல்முறையீட்டில் தீர்வுக்குரிய பிரச்சினைகள்:-**

1 விசாரணை நீதிமன்றம் எதிரி மீதுள்ள குற்றச்சாட்டான இதச பிரிவு 324-ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் ஐயத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டிருப்பதாக கண்டுணர்ந்திருப்பது சரியானதா?

2 விசாரணை நீதிமன்றமான மானாமதுரை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஆண்டு பட்டிகை வழக்கு எண்.685/2022-ல் கடந்த 20.09.2024-ம் தேதியன்று இவ்வழக்கு எதிரியான மேல்முறையீட்டாளருக்கு எதிராக பிறப்பித்த தண்டனை தீர்ப்பும், தீர்ப்பு தண்டனையும் ரத்து செய்யத்தக்கதா அல்லது நிலைநிறுத்தத்தக்கதா? அல்லது மாற்றியமைக்கத்தக்கதா?

3 இந்த குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?

**பிரச்சனைகள் : 1 முதல் 3:-**

**7)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் புகார்தாரர் சுப்பையா என்பவர் கூலி வேலை பார்த்து வருகிறார் என்றும், புகார்தாரர் சுப்பையாவிற்கும், மானாமதுரை பாண்டியன் நகரில் வசிக்கும் கருப்பையா மகன் மாயாண்டி என்பவருக்கும் பணம் கடன் வசூல் செய்வதில் பிரச்சனை ஏற்பட்டு சிவகங்கை சப்கோர்ட்டில் ஏல நடவடிக்கைக்கான கடன் வசூல் மனு நிலுவையில் உள்ளது என்றும், இந்நிலையில் கடந்த 18.02.2019-ம் தேதி மதியம் 2.15 மணிக்கு புகார்தாரர் சுப்பையா மானாமதுரை மேலரத வீதி வேல்முருகன் என்பவரது வீட்டின் அருகே நடந்து வந்து கொண்டிருந்தவரை எதிரிகள் இருவரும் புகார்தாரரைப் பார்த்து ஏண்டா தேவிடியா மகனே எங்க மேலேயே கேஸ் போடுறியா என அசிங்கமாக பேசி 1-வது எதிரி சென்ட்ரிங் கம்பியால் புகார்தாரர் சுப்பையாவின் மூக்கில் அடித்தும், 2-வது எதிரி உருட்டுக்

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.04.10 18:20:56 +0530

10.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை

கட்டையால் புகார்தாரர் சுப்பையாவின் இடது காதில் அடித்து கொடுங்காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் இருவரும் புகார்தாரரைப் பார்த்து உன்னை கொன்றால் தான் கோர்ட் கேஸ்க்கு எல்லாம் போகமாட்ட என கொலை மிரட்டல் செய்து குற்றம் புரிந்துள்ளதாக குறிப்பிட்டு 1-வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 326, 506(*ii*) கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

**8)** இருதரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்து விசாரணை நீதிமன்றம் 1-வது எதிரி மீது இ.த.ச பிரிவு 324-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து 1-வது எதிரிக்கு இ.த.ச பிரிவு 324-ன் கீழான குற்றத்திற்கு 6 மாதங்கள் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி தீர்ப்பின் பேரில் குறைவுற்றதாக கருதி எதிரி இம்மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**9)** இவ்வழக்கில் உள்ள சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது இவ்வழக்கில் புகார் மனு கொடுத்த புகார்தாரர் தற்சமயம் இறந்துவிட்டதால் அவரது மனைவி அ.சா.1 சின்னப்பொண்ணு என்பவர் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். புகார்தாரரின் மகன் ரவிவர்மன் என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.3 மற்றும் அ.சா.4 பார்வை மகஜர் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.5 மற்றும் அ.சா.6 புகார்தாரர் சுப்பையாவிற்கு சிகிச்சையளித்து சான்று வழங்கிய மருத்துவர்கள் ஆவார்கள். அ.சா.1 தனது முதல் விசாரணையில் ஆஜர் எதிரியைத் தெரியும் என்றும், புகார்தாரர் சுப்பையா தனது கணவர் என்றும், தனது கணவர் சுப்பையா இறந்து இன்றுடன் 12 நாட்கள் ஆகின்றது என்றும், கடந்த 18.02.2019-ம் தேதியன்று மதியம் 02.15

மணியளவில் நீதிமன்றத்திலிருந்து ஒரு நபர் சம்மனை கொண்டு வந்து மாயாண்டி என்பவருக்கு அழைப்பாணையை சார்பு செய்ய வேண்டும் என்று சொல்லி சம்மனை கொண்டு வந்த நபர் மாயாண்டி வீட்டை அடையாளம் காட்டச் சொல்லி தனது கணவர் சுப்பையாவிடமும், தன்னிடமும் தங்கள் வீட்டு வாசலில் வைத்து கேட்டுக் கொண்டதாகவும், அதை தொடர்ந்து தானும், தனது கணவர் சுப்பையாவும் வசந்தம் நகரில் உள்ள மாயாண்டி வீட்டை சம்மன் சார்பு செய்ய வந்த நபரிடம் காண்பித்ததாகவும், தானும், தனது கணவரும் மானாமதுரையில் உள்ள மேலரத வீதியில் நடந்து வந்து கொண்டிருந்த போது மாயாண்டி மகன் அழகு சுந்தரம் முனியாண்டி மகன் அறிவுக்கரசன் ஆகிய இருவரும் சென்ட்ரிங் போட பயன்படுத்தப்படும் சின்னக்கம்பியை வைத்துக் கொண்டும், அறிவுக்கரசன் கையில் சிறிய கட்டையை வைத்துக்கொண்டு வந்து அழகுசுந்தரம் என்பவர் தனது கணவரை கம்பியால் வலது பக்க கண்ணுக்கு கீழ் பகுதியில் தாக்கி குத்தினார் என்றும், அறிவுக்கரசன் கட்டையை கொண்டு தனது கணவரின் இடது காதில் தாக்கியதில் இடது பக்க காது செவுள் கிழிந்துவிட்டது என்றும், தனது கணவர் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தால் எதிரிகள் அடித்ததில் தனது கணவர் அங்கே மயங்கி விழுந்துவிட்டார் என்றும், தனது கணவரை தாக்கி கொண்டிருந்த சமயத்தில் தனது இளைய மகன் ரவிவர்மன் அங்கு வந்தார் என்றும், அங்கிருந்த எதிரிகள் அப்போது தன்னையும், தன் கணவரையும் பார்த்து மானாமதுரையில் உங்களை இருக்க விடமாட்டோம், கோர்ட்டிற்கு போனால் உங்களை தொலைத்துவிடுவோம் என்று சொல்லி மிரட்டி தாக்கியதாகவும், அதன் பிறகு தானும், தனது மகனும் தனது கணவர் சுப்பையாவை காரில் மானாமதுரை

அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றதாகவும், மானாமதுரை அரசு மருத்துவமனையில் தனது கணவருக்கு காயத்தின் தன்மையை குறிப்பிட்டு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு அறிவுறுத்தியதாகவும், சிவகங்கை அரசு மருத்துவமனையில் தனது கணவரை சிகிச்சையில் சேர்த்து அவர் அங்கு 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்ததாகவும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் தனது கணவர் சுப்பையாவின் கையொப்பம் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1-ன் மகனான அ.சா.2 ரவிவர்மன் அ.சா.1 தாயாரின் சாட்சியத்தை ஒத்தே சாட்சியம் அளித்துள்ளார்.

10) மேலும் இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சிகளாக அ.சா.3 மற்றும் அ.சா.4 தங்களது முதல் விசாரணையில் பார்வை மகஜர் குறித்த விபரங்கள் தங்களுக்கு தெரியாது என்றும், வழக்கு குறித்து தங்களுக்கு எந்த விபரமும் தெரியாது என்று சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்கள்.

11) மேலும் இவ்வழக்கில் புகார்தாரர் சுப்பையாவிற்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.5 தனது சாட்சியத்தில் கடந்த 18.02.2019-ம் தேதியன்று பணி மருத்துவராக மானாமதுரை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது மானாமதுரை சோமநாதபுரம் காலனியை சேர்ந்த கருப்பண்ணன் மகன் சுப்பையா என்பவர் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனை மானாமதுரைக்கு வந்ததாகவும், சுமார் பிற்பகல் 2.15 மணியளவில் மேலரத வீதி மெயின் ரோட்டில் மானாமதுரையில் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு ஆண்கள் கம்பி மற்றும் கட்டையால் அடித்ததாக சொன்னதாகவும், அவரை பரிசோதித்த போது 1) வலது பக்க முகத்தில்

கண்ணுக்கு கீழ் *1/2x1/2x1/2* செ.மீ அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது 2) சிறிய சிராய்ப்பு காயமானது இடது பக்க மூக்கு அருகே காணப்பட்டது. 3) நோயாளி தனது இடது பக்க காதில் வலியும் கேட்கும் தன்மையும் குறைந்து காணப்படுவதாக சொன்னார் என்றும், இடது பக்க மார்பின் மேல் வலி இருப்பதாக தன்னால் சரியாக சுவாசிக்க இயலவில்லை என்று கூறியதாகவும், அவரை வெளிநோயாளியாக சிகிச்சையளித்து காது, மூக்கு, தொண்டை மருத்துவரிடம் மேல்சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அன்றையதினமே பரிந்துரைத்ததாகவும், சிவகங்கை அரசு மருத்துவமனையில் 21.02.2019-ம் தேதியன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு 26.02.2019-ம் தேதியன்று சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டதாகவும், சுப்பையாவை பரிசோதித்த காது, மூக்கு, தொண்டை நிபுணரின் கூற்றுப்படி இடது பக்க காதில் அதிர்வினால் ஏற்படக்கூடிய துளை காது சவ்வில் காணப்பட்டதாக மருத்துவ கருத்துரை சான்று வழங்கியதாகவும், சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவரின் படி சுப்பையாவிற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

**12)** மேலும் புகார்தாரர் சுப்பையாவிற்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.6 தனது சாட்சியத்தில் கடந்த 21.02.2019-ம் தேதியன்று சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி அரசு மருத்துவராக பணியில் இருந்த போது சுப்பையா என்ற 70 வயது மதிக்கத்தக்க நபர் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், சுப்பையாவை தான் பரிசோதித்ததில் அவரது இடது காது செவிப்பறை கிழிந்திருந்தது என்றும், மேலும் சுப்பையாவிற்கு இடது காதில் கேட்கும் திறன் குறைந்திருந்தது என்றும், இதை

கருத்தில் கொண்டு அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று 27.03.2019 தான் சான்று வழங்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13)** மேலும் புகார்தாரரான சுப்பையாவிற்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை அளித்தது குறித்து அ.சா.5 மற்றும் அ.சா.6 மருத்துவர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள். தற்சமயம் புகார்தாரர் சுப்பையா இறந்துவிட்டதாலும், புகார்தாரரின் மனைவி மற்றும் மகன் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்கள் வாயிலாக அரசு தரப்பு வழக்கு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே அ.சா.5 மற்றும் அ.சா.6 மருத்துவர்களின் சாட்சியப்படி புகார்தாரர் சுப்பையாவிற்கு 1-வது எதிரியால் காயம் ஏற்பட்டுள்ளதையும், அந்த காயம் கம்பி மற்றும் உருட்டுக்கட்டை போன்ற ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதத்தால் ஏற்பட்டுள்ளது என்பது மருத்துவரின் சாட்சியம் மூலம் அறிய முடிகிறது. இருந்த போதிலும் புகார்தாரருக்கு ஏற்பட்ட காயமானது வலது பக்க முகத்தில் கண்ணுக்கு கீழ் *1/2x1/2x1/2* செ.மீ அளவில் சிதைந்த காயம் இருந்ததாகவும், சிறிய சிராய்ப்பு காயமானது இடது பக்க மூக்கு அருகே ஏற்பட்டுள்ளது என்று மருத்துவர் சாட்சியம் அளித்துள்ளதாலும் இதச பிரிவு 324-ன் கீழ் விசாரணை நீதிமன்றம் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்துள்ளதில் இந்நீதிமன்றம் தலையிட விரும்பவில்லை.

**14)** இம்மேல்முறையீடு குறிப்பிடும் குற்ற வழக்கில் அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 காயச்சான்றிதழ்களில் புகார்தாரரான சுப்பையாவை மேல்முறையீட்டாளர்/1-வது எதிரி கம்பியால் தாக்கியதாக சொல்லப்படும் கம்பி மற்றும் 2-வது எதிரி பயன்படுத்தியதாக

கூறப்படும் உருட்டுக்கட்டை ஆகியவை போலீசாரால் உரிய வகையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றப்பட்டு அரசுத் தரப்பில் சான்றுப் பொருட்களாகவும் குறியீடு செய்யப்படவில்லை என்பதையும் இந்நீதிமன்றம் கவனிக்கத் தவறவில்லை. மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2 மட்டும் தான் கண்ணுற்ற சாட்சிகளாக சாட்சியம் அளித்துள்ளதையும், அ.சா.3 மற்றும் அ.சா.4 சாட்சிகள் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளதையும் இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

**15)** எனவே, வழக்குச் சம்பவம் 2019-ல் நடந்திருப்பதாலும், புகார்தாரரை மேல்முறையீட்டாளர்/1-வது எதிரி கம்பியால் தாக்கியதாக சொல்லப்படும் கம்பி மற்றும் 2-வது எதிரி பயன்படுத்தியதாக கூறப்படும் உருட்டுக்கட்டை ஆகியவற்றை கைப்பற்றி புலன் விசாரணை அதிகாரி விசாரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாத நிலையிலும், புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 காயச்சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையிலும், விசாரணை நீதிமன்றம் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.685/2022-ல் கடந்த 20.09.2024-ம் தேதியன்று இம்மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு எதிராக வழங்கியுள்ள ஆறு மாத கால மெய்க்காவல் சிறைத் தண்டனையை இரத்து செய்தும், இதச பிரிவு 324-ன் கீழான குற்றத்திற்கு அபராதம் விதிப்பதே வழக்கு பொருண்மைகளின்படி சரியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக,** இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு மானாமதுரை, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.685/2022-ல் கடந்த 20.09.2024-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட ஆறு மாத கால மெய்க்காவல் சிறைத் தண்டனையை இரத்து செய்தும், மேற்படி இதச பிரிவு 324-ன் கீழான

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:21:40 +0530

குற்றத்திற்காக ரூ.1000/- அபராதமாக மேல்முறையீட்டாளர்/எதிரி இந்நீதிமன்றத்தில் செலுத்த வேண்டுமென்றும், மேற்படி அபராதம் செலுத்தத் தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.04.10 18:21:46 +0530

முதன்மை அமர்வு நீதிபதி,
சிவகங்கை.

**நகல்:**
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மானாமதுரை.

முதன்மை அமர்வு நீதிமன்றம்,
சிவகங்கை.
குற்றவியல் மேல்முறையீட்டு
வழக்கு எண்.126/2024
சீரான/வரைவு/ தீர்ப்புரை
நாள்: 10.04.2026

10.04.2026 முதன்மை அமர்வு நீதிபதி, சிவகங்கை